ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2376/25 - 2024 මාර්තු මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.21

*2376/25 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்***

*123(8) ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி*

2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் உ. இ. சட்டம் என குறித்துரைக்கப்படும்) 123 ஆம் பிரிவின் (8) ஆம் உப பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இவ் ஒழுங்குவிதி மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு (இதனகத்துப் பின்னர் உ. இ. ஆ. நா. என குறித்துரைக்கப்படும்) காலத்திற்குக் காலம் வழமையின் அடிப்படையில் பகிரப்பட வேண்டிய தகவல்களை நிர்ணயிக்கின்றேன். ஏதேனும் எழுத்துமூல சட்டத்திற்கு முரண்படாது, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் ஏற்பாடு செய்துள்ளவாறு, அரசாங்க நிறுவனங்கள் அடங்கலாக ஆட்கள், இவ் அறிவித்தலின் அட்டவணை II இன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உ. இ. ஆ. நா. இற்கு அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை வழங்குதல் வேண்டும்.

இவ் அறிவித்தல் 2024, ஏப்பிறல் 1 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, மாச்சு 21.

1A - PG 6677 — 404 (2024/03)

## அட்டவணை I

(1) தலைமை பதிவாளர் திணைக்களத்தின் தலைமைப் பதிவாளர், கீழ்வருவனவற்றை வலைத்தள அடிப்படையிலான தளத்தினூடாக அல்லது உ. இ. ஆ. நா. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் தளத்தினூடாக மாதாந்த அடிப்படையில் வழங்குதல் வேண்டும் :-

(அ) மாற்றீடு அடங்கலாக பதிவுசெய்யப்பட்ட காணி/ஆதனத்தின் உரிமைத்துவம் அல்லது அறுதி மீதான தகவல்-
- (i) உரிமையாளர்/கள் அல்லது உரித்துடைமையாளர்/களின் பெயர்/கள் ;
- (ii) உரித்துடைமையாளர்/களின் தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டு இலக்கம்/கம்பனி பதிவு இலக்கம் (இதனகத்துப் பின்னர் “தே. அ. இ/க. சீ/க. ப. இ” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ;
- (iii) மாற்றீட்டு வகை ;
- (iv) விற்பனையின் போது-
  - (ivஅ) விற்பனையாளர்/களின் பெயர் ;
  - (ivஆ) விற்பனையாளர்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (v) காணி/ஆதனத்தின் அமைவிடம் ;
- (vi) உரிமைத்துவம்/உரித்து ஆவணம் பிரகாரம் காணி/ஆதனத்தின் பெறுமதி ;
- (vii) நொத்தாரிசின் பெயர் ;
- (viii) நொத்தாரிசின் தேசிய அடையாள அட்டை இலக்கம்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் மீதான தகவல்-
- (i) குத்தகைக்காரரின்/களின் பெயர் ;
- (ii) குத்தகைக்காரரின்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (iii) குத்தகை எடுப்பவர்/களின் பெயர்/கள் ;
- (iv) குத்தகை எடுப்பவர்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (v) ஆதனத்தின் முகவரி ;
- (vi) குத்தகை ஒப்பந்தத்தின் திகதி ;
- (vii) குத்தகையின் பெறுமதி ;
- (viii) குத்தகை வாடகை.

(2) தலைமைப் பதிவாளர் திணைக்களத்தின் தலைமைப் பதிவாளர், கீழ்வருவனவற்றை வலைத்தள அடிப்படையிலான தளத்தினூடாக அல்லது உ. இ. ஆ. நா. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் தளத்தினூடாக உடனுக்குடன் அடிப்படையில் வழங்குதல் வேண்டும் :

(அ) பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் தகவல்கள் -
- (i) கம்பனி பதிவிலக்கம் ;
- (ii) கம்பனியின் பெயர் ;
- (iii) கூட்டிணைக்கப்பட்ட திகதி ;
- (iv) கம்பனியின் முகவரி ;
- (v) மூலதன பங்கின் பெறுமதி ;
- (vi) பணிப்பாளர்/களின் பெயர்/கள் ;
- (vii) பணிப்பாளர்/களின் தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டு இலக்கம்.

(ஆ) பங்குதாரர்களின் தகவல் -
- (i) கம்பனி பதிவிலக்கம் ;
- (ii) கம்பனியின் பெயர் ;
- (iii) கம்பனியின் முகவரி ;
- (iv) மூலதன பங்கின் பெறுமதி ;
- (v) பங்குதாரரின்/களின் பெயர்/கள் ;
- (vi) பங்குதாரரின்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (vii) பங்குதாரரின்/களின் முகவரி/கள் ;
- (viii) கம்பனி பங்குகளின் பங்களிப்பு.

(இ) பங்குகளின் மாற்றீடு மீதான தகவல்கள் -
- (i) பங்குகளின் வழங்குகை ;
- (ii) பங்குகளின் மாற்றீடு ;
- (iii) மாற்றீடு செய்யப்பட்ட திகதி ;
- (iv) பங்குதாரரின் பெயர் ;
- (v) பங்குதாரரின் முகவரி.

(ஈ) கம்பனி பெயரை அழித்தல் தொடர்பான தகவல் -
- (i) கம்பனி பதிவிலக்கம் ;
- (ii) கம்பனியின் பெயர் ;
- (iii) பெயர் அழிக்கப்பட்ட திகதி ;
- (iv) கம்பனியின் முகவரி.

(3) மோட்டார் வாகனத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பதிவாளர் நாயகம், கீழ்வருவனவற்றை வலைத்தள அடிப்படையிலான தளத்தினூடாக அல்லது உ. இ. ஆ. நா. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் தளத்தினூடாக உடனுக்குடன் அடிப்படையில் வழங்குதல் வேண்டும் :-

(அ) பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் தகவல்கள் -
- (i) உரிமையாளரின் பெயர்/கள் ;
- (ii) உரிமையாளர்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (iii) உரிமத்தகட்டு இலக்கம் ;
- (iv) மாற்றீட்டு திகதி ;
- (v) வாகன வகை.

(ஆ) வாகன மாற்றீடு தொடர்பில் தகவல்கள் -
- (i) விற்பனையாளர்/களின் பெயர் ;
- (ii) விற்பனையாளர்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (iii) வாங்குபவரின் பெயர் ;
- (iv) வாங்குபவரின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (v) உரிமத்தகட்டு இலக்கம் ;
- (vi) பதிவுத் திகதி ;
- (vii) வாகன வகை.

(4) பண்டங்கள், வேலைகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனையல்லாத சேவை வழங்குகைக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கு பொறுப்பான அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், இடைமுகங்களினூடாக மாதாந்த அடிப்படையில் கீழ்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும் :-

(அ) ஒப்பந்தங்கள் மீதான தகவல்கள் -
- (i) ஒப்பந்த திறத்தவர்களின் பெயர்/கள் ;
- (ii) ஒப்பந்த திறத்தவர்களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;
- (iii) ஒப்பந்த திறத்தவர்களின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் ;
- (iv) ஒப்பந்தத்தின் இயல்பு ;
- (v) ஒப்பந்த திகதி ;
- (vi) ஒப்பந்தத்தின் பெறுமதி ;
- (vii) நிறைவுற்ற திகதி ;
- (viii) கொடுப்பனவிற்கான சான்று.

(ஆ) பண்டங்கள்/வேலைகள்/சேவைகள் தொடர்பான தகவல்கள் -
- (i) பண்டங்கள்/வேலைகள்/சேவைகளின் இயல்பு ;
- (ii) விநியோகத் திகதி ;
- (iii) வழங்கிய/விநியோகித்த இடம் ;
- (iv) பண்டங்களின் அளவும் தரமும்.

(5) இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படும் வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் உட்பட ஏதேனும் நிதி நிறுவனங்கள், கீழ்வருவனவற்றை வலைத்தள அடிப்படையிலான தளத்தினூடாக அல்லது உ. இ. ஆ. நா. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் தளத்தினூடாக காலாண்டு அடிப்படையில் வழங்குதல் வேண்டும் :-

(அ) அனைத்து நடைமுறைக் கணக்குகளினதும் தகவல்கள் -

(i) கூட்டுக் கணக்குகள் அடங்கலாக கணக்கு வைத்திருப்பவர்/களின் பெயர்/கள் ;

(ii) கணக்கிலக்கம் ;

(iii) கணக்கு வைத்திருப்பவர்/களின் முகவரி/கள் ;

(iv) தே. அ. இ/க. சீ/க. ப. இ அல்லது இலங்கை மத்திய வங்கியின் வலியுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பராமரிக்கப்படும் கணக்கு வைத்திருப்பவர்/களின் பிரத்தியேக இலக்கம் ;

(v) 2024, யூலை 1 ஆந் திகதி அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் கணக்குகளுக்கான வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் ;

(vi) காலாண்டு முடிவின் போதான மீதி ;

(vii) காலாண்டின் பற்று மற்றும் வரவுகளின் கூட்டுத்தொகை.

(ஆ) கடன் மற்றும் முற்பணங்களின் மீதான தகவல்கள் -

(i) 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகத்திற்குச் சமர்ப்பிக்கும் அல்லது சமர்ப்பிக்கத் தேவைப்படுத்தப்பட்ட அனைத்து தகவல்கள் ;

(ii) ஈடு மற்றும் தங்கக் கடன்கள், காசுப் பிணைக் கடன்கள் அல்லது வைப்புப் பிணைக் கடன்கள் அடங்கலாக இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு வழங்கப்படாத நிதி நிறுவனத்தினால் வழங்கும் ஏனைய கடன்கள் அல்லது முற்பணங்களுக்கான விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அதே தகவல்கள் ;

(6) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், கீழ்வருவனவற்றை வலைத்தள அடிப்படையிலான தளத்தினூடாக அல்லது உ. இ. ஆ. நா. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் காலாண்டு அடிப்படையில் வழங்குதல் வேண்டும் :-

(அ) முதலீட்டு செயலடைக் கோவைகள் (portfolio) மீதான தகவல்கள் -

(i) முதலீட்டாளர்/களின் பெயர் மற்றும் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;

(ii) முதலீட்டாளர்/களின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம்/கள் ;

(iii) பங்குகளின் எண்ணிக்கை ;

(iv) காலாண்டு முடிவின் போது பங்குகளின் பெறுமதி ;

(v) செயலடைக்கோவையின் பெறுமதி ;

(vi) கொள்வனவுத் திகதி ;

(vii) கொள்முதல் பெறுமதி ;

(viii) கூப்பன் பெறுமதிகள் ;

(ix) பங்குகளின் வகை மற்றும் அல்லது பேரம் பேசத்தக்க சாதனம்.

(ஆ) பங்குகள் மற்றும் ஏனைய பேரம் பேசத்தக்க சாதனங்களின் பரிவர்த்தனை மீதான தகவல்கள் -

(i) விற்பனையாளர்/கள் மற்றும் கொள்வனவாளர்/களின் பெயர்/கள் ;

(ii) விற்பனையாளர்/கள் மற்றும் கொள்வனவாளர்/களின் தே. அ. இ/க. சீ/க. ப. இ ;

(iii) விற்பனையாளர்/கள் மற்றும் கொள்வனவாளர்/களின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் ;

(iv) பேரம் பேசப்பட்ட பங்கு அல்லது சாதனங்களின் எண்ணிக்கை ;

(v) பரிவர்த்தனைப் பெறுமதி ;

(vi) பரிவர்த்தனைத் திகதி ;

(vii) சாதனம்/களின் வகை.

## அட்டவணை II

1. அட்டவணை I இன் பிரகாரம் உ. இ. ஆ. நா. இனால் பெறப்பட்ட தகவல்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருவாய் நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் (RAMIS) இடர் அவத்தையில் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

2. அட்டவணை I இன் 5 மற்றும் 6 ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆட்கள், ஏற்புடைய காலாண்டு முடிவடைந்த பின்னர் அடுத்த மாதத்தின் இருபதாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு காலாண்டிற்குமான அனைத்து தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

3. இந்த அறிவித்தல் திகதிக்கு முன்னர், எவரேனும் ஆளொருவரினால் அல்லது அரசாங்க நிறுவனத்தினால் ஏதேனும் தகவல்கள் பராமரிக்கப்படவில்லை எனில், அத்தகைய ஆள் அல்லது நிறுவனம், 2024, யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய தகவல்களைப் பராமரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில், அத்தகைய தகவல் தொடர்பாக, இந்த அறிவித்தலுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

4. உ. இ. ஆ. நா., அட்டவணை I இன் கீழான தகவல்களைக் கோப்பிடுவதனை ஆரம்பிக்கும் திகதியினை எழுத்துமூல அறிவித்தல் மூலம் அல்லது பகிரங்க அறிவித்தல் மூலமோ எவரேனும் நபருக்கு அல்லது அரசாங்க நிறுவனத்திற்கு அறிவிப்பார்.

5. இவ் அறிவித்தலின் தேவைப்பாட்டிற்கு -

(அ) "இலங்கை கடன் தகவல் பணியகம்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகம் எனப் பொருள்படும் ;

(ஆ) "நிதி நிறுவனமானது" உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அதே பொருட்கோடலைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) "அரசாங்க நிறுவனங்கள்" என்பது, ஏதேனும் திணைக்களம் அல்லது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பேற்பு எனப் பொருள்படுவதுடன் ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்தினையும் உள்ளடக்கும் ;

(ஈ) "ஆள்" ஆனது, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அதே பொருட்கோடலைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(உ) "காலாண்டு" என்பது, எந்தவொரு ஆண்டினதும் சனவரி, ஏப்பிறல், யூலை அல்லது ஒற்றோபர் முதலாம் திகதி ஆரம்பித்து மூன்று மாத காலப்பகுதி எனப் பொருள்படும்.

EOG 03 - 0169

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.